**செய்தி வெளியீடு எண்: 688** **நாள்: 20.11.2012**

**<u>செய்தி வெளியீடு</u>**

தமிழக அரசின் வருவாயில், பத்திரப் பதிவுத்துறையின் மூலம் கிடைக்கப் பெறும் வருவாய், ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. சொத்து பதிவு செய்தல், திருமணம் பதிவு செய்தல், சொத்து பரிமாற்றம், சொத்து சம்பந்தப்பட்ட விவரங்களை அளித்தல், பராமரித்தல், நிலத்தின் மதிப்பீட்டு விலை நிர்ணயித்தல் போன்ற பல்வேறு பணிகளை பதிவுத்துறை செய்து வருகிறது.

தமிழ்நாட்டில் பதிவுத்துறையில் உள்ள அனைத்து அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. இத்துறையில் உள்ள அனைத்து சார் பதிவகங்கள் உள்ளிட்ட சுமார் 700 அலுவலகங்களும் தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பில் (TNSWAN) இணைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் உள்ள அனைத்து பதிவுத்துறை அலுவலகங்களிலும் நடைபெறும் பணிகளை கணினிகள் மூலம் ஒருங்கிணைக்கவும், பத்திரம் பதிவு செய்வோருக்கு மேம்பட்ட சேவை வழங்கும் வகையில் நடைமுறையில் உள்ள அலுவலக மற்றும் கணினி செயல்பாடுகளை மாற்றி அமைக்கவும் ஏதுவாக இணையதள அடிப்படையிலான புதிய மென்பொருள் உருவாக்குதல், கணினி உட்பட வன்பொருள் வழங்குதல், பராமரித்தல், மேலாண்மை தகவல் பராமரிக்கும் முறையின் (Management Information System) மூலம் துறை பற்றிய அனைத்து விவரங்களையும் ஒருங்கிணைத்துப் பராமரித்தல் போன்ற பணிகளுக்காக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 117 கோடியே 34 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்கள்.

இதன் மூலம் பொதுமக்களுக்கு தேவைப்படும் அனைத்து விவரங்களும் வெளிப்படையாக உடனடியாக கிடைக்கப் பெறும். மேம்படுத்தப்பட்ட கணினி மயமாக்கலினால் பணிகள் அனைத்தும் விரைவாக முடிக்கப்பெற்று, பொது மக்களுக்கு தேவையான ஆவணங்கள் அனைத்தும் உடனடியாக கிடைக்க வழி வகை ஏற்படும்.

பதிவுத்துறையின் கீழ் செயல்படும் சார்பதிவாளர் அலுவலகங்களில் முறைகேடுகள் எதுவும் நடைபெறாவண்ணம் கண்காணிக்க, ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகத்திலும் இரண்டு IP Camera நிறுவுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம் சார்பதிவாளர் அலுவலகங்களில் அன்றாடம் நடைபெறும் பத்திரப் பதிவு மற்றும் திருமணம் பதிவு செய்தல் போன்ற பல்வேறு பணிகள் பதிவு செய்யப்படும். இதன் மூலம் இடைத்தரகர்கள் தலையீடு முற்றிலும் தடுக்கப்படும். மேலும், ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகத்தில் நடைபெறும் அனைத்து நடவடிக்கைகளையும், இணைய தள இணைப்பு வழியாக பதிவுத்துறைத் தலைவர் அலுவலகத்தில் இருந்து கொண்டே கண்காணிக்க இயலுமென்பதால், சார் பதிவாளர் அலுவலகங்களின் செயல்பாடுகள் வெளிப்படையாக இருக்கும். இதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 3 கோடியே 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், சார்பதிவாளர் அலுவலகத்தில் நடக்கும் ஆவணப் பதிவு மற்றும் திருமணப் பதிவு போன்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் படம் பிடிக்கப்பட்டு குறுந்தகட்டில் பதிவு செய்து சம்பந்தப்பட்ட நபர்களுக்கு வழங்கப்படும். இதற்காக 50 ரூபாய் அவர்களிடமிருந்து வசூலிக்கப்படும். இப்பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) மூலம் பணியாளர்கள் நியமிக்கப்படுவர். மேலும், இந்த குறுந்தகடுகள் வருங்காலத்தில் ஆவணப் பதிவு மற்றும் திருமணப் பதிவு பற்றி ஏற்படும் பிரச்சனைகளுக்கு தக்க ஆதாரமாக திகழும்.

மேலும், பல பதிவுத்துறை அலுவலகங்கள் தனியார் கட்டடங்கள், பழுதடைந்த அரசுக் கட்டடங்கள் மற்றும் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த அரசு கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இந்த கட்டடங்கள் அனைத்தும் போதிய அடிப்படை வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதியின்றி உள்ளதால், இங்கு வருகைத் தரும் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இந்தக் கட்டடங்களில் அலுவலக பணியாளர்கள் பணிபுரிவதற்கு போதுமான இடவசதி, பாதுகாப்பான வைப்பறைகள் ஆகியன இல்லாத நிலை உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் சார்பதிவாளர் அலுவலகங்கள் அனைத்திற்கும் 5 ஆண்டு காலத்திற்குள் சொந்த கட்டடங்கள் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். புதியதாக கட்டப்படும் கட்டடங்கள் அலுவலர்களுக்கான அறைகளுடன், கணினி அறை, பதிவுறுக்கள் பாதுகாப்பு அறை, பொதுமக்கள் காத்திருப்பதற்கான அறை, முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான சாய்தள மேடை, அகலமான நடைபாதை, பாதுகாக்கப்பட்ட குடிநீர், நவீன கழிப்பறை போன்ற வசதிகளுடன் அமையப்பெறும்.

முதற்கட்டமாக கடந்த ஆண்டில் 52 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 26 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்கள். இந்த கட்டடங்கள் கட்டும் பணி தற்பொழுது நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக நடப்பு ஆண்டு 2012-13-ல் தென்சென்னை, செங்கல்பட்டு, அரக்கோணம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், ஈரோடு, கோபிசெட்டிப்பாளையம், நாமக்கல், தர்மபுரி, அரியலூர், மயிலாடுதுறை, சேரன்மகாதேவி, மார்த்தாண்டம், பழநி, ராமநாதபுரம், கும்பகோணம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 17 இடங்களில் ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்த வளாகங்கள் 29 சார்பதிவாளர் அலுவலகங்கள் உள்ளடக்கி கட்டப்படும். இது தவிர 48 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு தனித்தனியாக சொந்தக் கட்டடங்கள் கட்டவும் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்கென 48 கோடியே 90 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள் :- 20.11.2012.